**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.221/2013 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.1 |
| Name | : | சிவக்குமார் |
| Father's Name/Husband Name: | | பச்சமுத்து |
| Village | : | மேட்டூர் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 49/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.05.2025

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன் விவசாய வேலை செய்து வருகிறனே். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 13 வருடங்களுக்கு முன்பு மாவிளங்கை படைவெட்டியம்மன் கோவிலில் வேலை பார்த்து வந்தேன். எனது மனைவிக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் கிருஷ்ணாபுரத்தில் உள்ள மருத்துவரிடம் அழைத்து சென்றேன். பின்னர் சிகிச்சை முடிந்து வந்து கொண்டிருக்கும்போது அவருக்கு மயக்கம் வந்ததால் எனது மனைவியை உட்கார வைத்து எனது அண்ணன் வீட்டிற்கு சென்று அண்ணன் மகளிடம் தண்ணீர் கொண்டுவரசென்னேன். அப்போது அண்ணன் வீட்டிற்கு செல்லும் வழியில் உள்ள பிள்ளையார் கோவில் அருகே ஆஜர் எதிரி அமர்ந்திருந்தார். என் அண்ணன் மகள் செல்லம்மாள் தண்ணீர் கொண்டுவரும்போது ஆஜர் எதிரி அவரை மறித்து கட்டி பிடித்து தூக்கி முத்தம் கொடுத்தார் அதை எனது மனைவி பார்த்து சென்று கேட்டபோது என் மனைவியை ஆஜர் எதிரி எட்டி வயிற்றில்

உதைத்தார். வலிதாங்காமல் எனது மனைவி கீழே உட்கார்ந்துவிட்டார். உடனே நான் ஆஜர் எதிரியிடம் எதற்காக என் மனைவியை அடித்தாய் என்று கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி நீ யாருட சப்போர்ட்டுக்கு வர என்று கேட்டு அருகில் கிடந்த அருகில் கருங்கல்லை எடுத்து தலையில் அடித்தார். நான் மயக்கம் போட்டு கீழே விழுந்தேன். அப்போது ஒரு முதியவர் செல்லப்பிள்ளை அங்கு வந்து என்னை தூக்கினார். அதன் பின்னர் எனக்கு நினைவில்லை. நான் மயக்கத்தில் இருந்தேன். பிறகு என்னை எனது அண்ணன் மகள் மற்றும் எனது மனைவி 108 ஆம்புலன்ஸ் மூலம் பெரம்பலூரில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகாரை நான் தான் கொடுத்தேன். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i)நான் தற்போது கூறிய சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். அஜர் எதிரிக்கும் எங்களுக்கும் ஏற்கனவே முன் விரோம் இருந்தது என்றால் சரியல்ல. முன் பின் பார்த்தது கூட இல்லை. ஆஜர் எதிரி எனது சொந்தக்காரர் என்ற விபரத்தை தெரிந்து கொண்டீர்காள என்றால் இல்லை. நான் மருத்துவமனையில் வாக்குமூலம் கொடுத்த பின்பு போலீசார் எப்போது வந்து என்னை விசாரித்தார்கள் என்றால் நான் மருத்துவமனையில் இருந்த மறு நாளே என்னை விசாரித்தார்கள். நான் வாக்குமூலம் கொடுத்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் வாக்குமூலம் கொடுத்த அன்றே வாங்கினார்கள். போலீசாரிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எந்த தேதியில் கொடுத்தேன் எந்த நேரத்தில் கொடுத்தேன் என்ற விபரத்தை கூறியுள்ளேனா என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. என்னிடம் வாக்குமூலம் பெற்ற போலீசாரின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் தான் எழுதினார். புகாரை போலீசார் படித்து காண்பித்தாரா என்றால் படித்து காண்பித்து சொன்னார். தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் 28.07.2012 ம் தேதி என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். சம்பவம் எந்த தேதியில் நடைபெற்றது

என்றால் எனக்கு தெரியாது. காலதாமத்திற்கான காரணம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி அடித்த கல்லை போலீசாரிடம் காண்பித்தேனா என்றால் நான் மயக்க நிலையில் இருந்ததால் நான் காண்பிக்கவில்லை. நான் மயக்கம் தெளிந்து வீட்டிற்கு வந்த பிறகு கல்லை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் மயக்கமாக இருந்ததால் எனக்கு உதவியாக எனது மனைவியும், எனது அண்ணன் மகளும் வந்தார்கள் என்றால் ஆமாம். நான் கண்முழித்து பார்க்கும்போது அவர்கள் எல்லாம் இருந்தார்ள். நான் வாக்குமூலத்தில் சொன்னதுபோல் ஆஜர் எதிரி கல்லால் என்னை கல்லால் அடிக்கவில்லை நான் தான் பைக்கில் இருந்து கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல. என் பைக்கிற்கு பெட்ரோல் போட்டுவிட்டு வரும்போது இந்த சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கும் எனக்கும் முன் விரோம் இருந்ததால் இந்த வழக்கை பொய்யாக தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அண்ணன் மகளை தூக்கி முத்தம் கொடுத்தார் என்று சொல்லிய சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் வாக்குமூலத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.221/2013 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | கொளஞ்சி |
| Father's Name/Husband Name: | | சிவக்குமார் |
| Village | : | மேட்டூர் |
| Taluk | : | வேப்பந்தட்டை |
| Age | : | 43/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.05.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் படிக்கவில்லை. கூலி வேலை வேலை செய்து வருகிறனே். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எங்களை அடித்த பிறகு தான் தெரியும். எனக்கு முன்பு சாட்சியம் அளித்த அ.சா.1 எனது கணவர் ஆவார். கடந்த 13 வருடங்களுக்கு முன்பு மாவிளங்கை படைவெட்டியம்மன் கோவிலில் வேலை பார்த்து வந்தோம். எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் கிருஷ்ணாபுரத்தில் உள்ள மருத்துவரிடம் எனது கணவர் அழைத்து சென்றார். பின்னர் சிகிச்சை முடிந்து வந்து கொண்டிருக்கும்போது எனக்கு மயக்கம் வந்ததால் என்னை உட்கார வைத்துவிட்டு எனது கணவர் அவரது அண்ணன் வீட்டிற்கு சென்று அவரது அண்ணன் மகளிடம் தண்ணீர் கொண்டுவரசென்னார். அப்போது அண்ணன் வீட்டிற்கு செல்லும் வழியில் உள்ள பிள்ளையார் கோவில் அருகே ஆஜர் எதிரி அமர்ந்திருந்தார். எனது கணவரின் அண்ணன் மகள் செல்லம்மாள் தண்ணீர் கொண்டுவரும்போது ஆஜர் எதிரி அவரை

மறித்து கட்டி பிடித்து கண்ணத்தில் முத்தம் கொடுத்தார் அதை நான் பார்த்து சென்று கேட்டபோது என்னை பார்த்து ஆஜர் எதரி நீயும் நல்லாதாண்டி இருக்க தாயும், மகளும் நல்லதாண்டி இருக்கீங்க வாங்கடி என்று அசிங்க அசிங்கமாக திட்டி என்னை எட்டி வயிற்றில் உதைத்தார். வலிதாங்காமல் நான் கீழே உட்கார்ந்துவிட்டேன். உடனே எனது கணவர் ஆஜர் எதிரியிடம் எதற்காக என் மனைவியை அடித்தாய் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி கல்லை எடுத்து எனது கணவரின் தலையில் அடித்தார். அப்போது அதே சின்னப்பிள்ளை என்பவர் அங்கு வந்து ஆஜர் எதிரியை தட்டிக்கேடடார். அதற்கு எதிரி அவரையும் கல்லால் முதுகில் அடித்துவிட்டார். பின்னர் நானும், எனது கணவரின் அண்ணன் மகள் மற்றும் எனது கணவர் ஆகியோர் 108 ஆம்புலன்ஸ் மூலம் பெரம்பலூரில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i)எனக்கு முன்பு சாட்சியம் அளித்த அ.சா.1 எனது கணவர் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் மருத்துவமனையில் விசாரித்தார்கள். நான் தற்போது கூறிய சங்கதிகளை தான் போலீசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். எனது கணவருக்கு தலையில் இரத்தம் வந்ததால் தான் நானும், எனது கணவரின் அண்ணன் மகளும் உதவிக்காக மருத்துவமனைக்கு எனது கணவரை அழைத்து சென்றோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எங்களின் உறவினர் என்றால் இல்லை. எனது மூத்தார் வசிக்கும் வீட்டின் அருகே ஒரே தெருவில் ஆஜர் எதிரி குடியிருக்கிறார் என்றால் இல்லை. அதே ரோட்டில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். எனது மூத்தார் மகள் செல்லம்மாளை கட்டி பிடித்து முத்தம் கொடுத்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அடித்த கல்லை போலீசாரிடம் காண்பித்தேனா என்றால் எனது கணவர் மயக்க நிலையில் இருந்ததால் நான் காண்பிக்கவில்லை. தனிப்பட்ட முறையில் என்னிடம் போலீசார் வந்து விசாரணை செய்தார்களா என்றால் மருத்துவமனையில் இருக்கும்போது விசாரித்தார்கள். அந்த விபரம் அனைத்தும் எனது மூத்தாரின் மகள் தான் கூறினார். என்னிடமோ, எனது மூத்தாரின் மகளிடமோ போலீசார் கையொப்பம் பெற்றார்களா என்றால் பெற்றார்கள். என்னிடம் கையெழுத்தும் பெற்று எனது மூத்தார் மகளிடமும்

கையெழுத்து பெற்று பின்னர் எனது கணவரிடம் புகாரை பெற்று அவரிடம் கையொப்பம் பெற்று பொய்யாக வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் எனது கணவர் கேட்டுக்கொண்டதற்கிங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.